திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Creations and Jeevakarunyam of Vallalar

Dr. G. Vanijothi

Assistant Professor, Department of Tamil, Sindhi College of Arts and Science, Chennai, India

Manuscript ID : **MT127A0092**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 21.10.2022
Revised: 04.11.2022
Accepted: 19.11.2022
Published: 01.12.2022

Pages : 201-208

DOI: 10.5281/zenodo.7375272

ABSTRACT:

Vallalar was unique among the mystics. He has spread the morals that can be used by all the people of the world regardless of caste, religion, language, race, etc. They introduced a new light worship in the worship of God.

Ramalingar received formal schooling. However, as he is very knowledgeable and able to read, he is gifted with the creative art of writing literature. As it is recorded that he received divine knowledge when he was a five-month-old child, it is possible to know the realization of God. It can be seen that he has acquired the ability to create literature by reading grammar literature and has created genres such as Arutpa, Agaval, and Application. Vallalar's status as a scholar of Muthamil is thus felt. Thiruvarutpa, authored by Vallalar, through literary works such as Jivakarunya Morality, Manupi Kanda Wasakam, Thontai Mandal Sathagam, and Abolivilavela, he not only verbalized the ideas of social reform but also brought many stations in the society in order to implement them. They are still working. The movements of those days were the basis for today's social developments.

KEYWORDS:

Vallalar, Jeevagarunyam, God, Light, Torch

வள்ளலாரின் படைப்புகளும் ஜீவகாருண்யமும்

முனைவர் க. வாணிஜோதி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சிந்திக் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

ஆன்மீகவாதிகளுள் தனித்தன்மை வாய்ந்தவராய்த் திகழ்ந்தவர் வள்ளலார். இவர் சாதி, சமயம், மொழி, இனம், முதலியவைக்கு உட்படாது உலக மாந்தர் அனைவர்க்கும் பயன்படக் கூடிய நெறியைப் பரப்பியுள்ளார்கள். இறைவழிபாட்டில் புதிய ஒளிவழிபாட்டினைப் புகுத்தினார்கள்.

இராமலிங்கர் முறையான பள்ளிக் கல்வியைக் கற்றிலர். ஆயினும் மிகுந்த கேள்வி ஞானமும் வாசிப்புத்திறனும் உடையவர் என்பதால் அவருக்கு இலக்கியம் படைக்கும் படைப்பாற்றல் கலை கைவரப் பெற்றுள்ளது. ஐந்து மாதக் குழந்தையாய் இருந்த போதே இறைஞானம் பெற்றதாகக் குறித்துள்ளதால் இறையருளால் ஓதாது உணர்ந்தமை அறிய முடிகிறது. இவர் இலக்கண இலக்கிய வாசிப்புகளால் இலக்கியம் படைக்கும் திறன் பெற்று அருட்பா, அகவல், விண்ணப்பம் போன்ற வகைகளைப் படைத்துள்ளமை புலப்படுகிறது. முத்தமிழ் சார்ந்த அறிவாற்றல் பெற்றவராக வள்ளலார் திகழ்ந்தமை இதனால் உணரப்படுகிறது. வள்ளலார் இயற்றியருளிய திருவருட்பா, ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம், தொண்டை மண்டல சதகம், ஒழிவிலெடுக்கம் போன்ற இலக்கியப் படைப்புகள் மூலம் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை வாயளவில் கூறியதோடு மட்டுமல்லாமல் செயல்படுத்தும் வகையில் சமுதாயத்தில் பல நிலையங்களைக் கொண்டு வந்துள்ளார். அவை இன்னும் செயல்பட்டு வருகின்றன. இன்றைய சமுதாய முன்னேற்றங்களுக்கு அன்றைய இயக்கங்களே அடிப்படையாக இருந்தன.

கருச்சொற்கள்

வள்ளலார், ஒளி, ஜீவகாருண்யம், ஜோதி, இறை

முன்னுரை

சமய உலகில் நுழைந்து சமய நெறியிலே நடந்து சமய உலகைக்கடந்தவர் வள்ளலார். இவர் மக்களை உருவ வழிப்பாட்டிலிருந்து அருவுருவுக்கு (ஜோதி வழிபாடு) வாருங்கள் உலகைக் உருவ அழைப்பு விடுவித்தார். வெள்ளாடை உடுத்திய துறவியாய் உள்ள வள்ளலாரை கண்டு வணங்கும் மக்கள், சமூகத்திற்கு அவர் கொண்டுவந்த

சீர்திருத்தங்கள் பல. வள்ளலார் சிறந்த இலக்கியவாதியாக விளங்கியதோடு மட்டுமல்லாமல் செய்யுள், உரைநடை இசைப்பாடல் போன்ற இலக்கிய வகைகளில் தன்னுடைய கொள்கைகளைப் பதிவு செய்துள்ளார். வள்ளலார் படைப்புகளான மனுமுறை கண்டவாசகம், ஜீவகாருண்ய வழக்கம். ஒழிளிலொடுக்கம், தொண்டமண்டல சதகம், சின்மய தீபிகை, திருவருட்பா ஆகிய நுல்களின் மூலம் அன்றைய காலச் சமூக நிலை எவ்வாறு இருந்தது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

வள்ளலாரின் படைப்புகள்

இயற்றிய நூல்கள்

1. மனு முறைகண்ட வாசகம் (1854)
2. ஜீவகாருண்ய ஒழுக்கம் (1867)

பதிப்பித்த நூல்கள்

1. ஒழிவிலொடுக்கம் (1851)
2. தொண்ட மண்டல சதகம் (1855)
3. சின்மய தீபிகை (1857)

அருளிய பாடல்கள்

1. திருவருட்பா (ஆறு திருமுறைகளும்)
2. மனுமுறை கண்ட வாசகம் 1854

உரைநடை நூல் அரிதான அக்காலத்தில் மனுமுறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டு உரைநடை நூல்களை வள்ளலார் எழுதியருளினார். இந்நூலை எழுதும்படி வள்ளல் பெருமானைக் கேட்டுக் கொண்டவர்கள் சென்னை சாஸ்திர விளக்கச் சங்கத்தார் ஆவர். மனுமுறைகண்ட வாசகம் முதன்முதலாக 1854-ஆம் ஆண்டு சூன் திங்களில் அச்சிடப் பெற்றது. “மனுமுறைகண்ட வாசகம் என்பது, மனு நீதிச்சோழன் முறை செய்த வரலாற்றைக் கூறுவது. பெரிய புராணத்துள் வரும் மனுச்சோழர் வரலாற்றை விரித்து ‘மனுமுறை கண்ட வாசகம்’ என்ற உரைநடை நூலை வள்ளலார் எழுதினார். இந்நூலுக்கு மனுமுறை கண்ட வாசகம் என அடிகளார் பெயரிட்டதே அவரின் தமிழ்ப் புலமைக்குச் சிறப்பாகும்”[1] என்று ப. சரவணன் குறிப்பிட்டுள்ளார். மனுநீதிச் சோழன் என்பதே பெருவழக்காயிருந்தும் பெருமான் மனுநீதிகண்ட வாசகம் என்னாது ‘மனுமுறைகண்ட வாசகம்’ எனப் பெயரிட்டது ஏனெனில் நீதியை ‘முறை’ என்பதே பண்டைத் தமிழ்ச்சான்றோர் வழக்கு.

**“குறைவிலுடம் பரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறை செய்த காவலன் காணம்மானை”[2]**

எனச் சிலம்பும்

“மகனை முறை செய்த மன்னவன்”[3] என மணிமேகலையும் கூறுகின்றன. திருவள்ளுவரும் அரச நீதியை ‘முறை’ என்றே கூறினார்.

நூலமைப்பு

மனுமுறை கண்ட வாசகத்தில் காப்புச் செய்யுள் முதலிலும் வாழ்த்துப் பாடல் இறுதியிலும் அமைந்து ‘சோழநாட்டுச் சீர்மையும் திருவாரூர்ச் சிறப்பு’ எனத் தொடங்கி ‘இறைவன் அருள்புரிந்து மறைய அரசன் ஆலயம் புகுந்து வணங்கல்’ என்னும் முப்பதும் இடையிடையே திருக்குறள், உள்தலைப்புகளில் அமைந்து, உரைநடையும் கம்பராமாயணப் பாடல் மேற்கோள்களும் உள்ளன. கதைத் தலைவன் முறையீடு செய்யும் பகுதியும் உரைச் செய்யுளில் அமைந்து காணப்படுகிறது.

கதைப்பாடல்

கதைப்பாடல் என்பது ஒரு கதையை உள்ளடக்கமாகக் கொண்ட, மக்கள் முன் எடுத்துரைக்கப்பட்டுப் பாடப்படுவதாகும். கதையானது வீரதீரச் செயலையோ. காதல் நிகழ்வையோ அல்லது வரலாறு மற்றும் புராண நிகழ்ச்சிகளையோ நாட்டுப்புற மக்களுக்குப் பாட்டில் எடுத்துரைப்பதாகும். சிறுகதைகளில் காணப்படுவதைப் போன்று தனிச் சம்பவத்தைப் பிரதிபலிப்பவையாகக் காணப்படுகிறது.

வள்ளலாரும் மனுமுறைகண்ட வாசகமும்

வள்ளலாரின் அருள் உள்ளத்திற்கு ஏற்ற கதையாக மனுநீதிச்சோழன் கதை அமைந்திருக்கிறது. ‘வாடிய பயிருக்காக வாடிய உள்ளமுடைய வள்ளலாரைக் கன்றின் இறப்பும், தாய்ப்பசுவின் வேதனையும் மன்னரின் அறஉணர்வும் வெகுவாக ஈர்த்து’, அதனைக் குறித்து நண்பர்களிடம் அவர் சொற்பொழிவு செய்திருக்க வேண்டும். பின் நன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க மனு முறை கண்ட வாசகம் அச்சாகியிருக்க வேண்டும்.

“இவருடைய ஆன்மீகநெறி, ஒழுக்கம், கருணை, உரைநெறி, சொற்பொழிவுத்திறன், புராணஅறிவு, இலக்கியப்பயிற்சி போன்ற அனைத்தும் ஒருசேர நிரம்பிய படைப்பாக மனுமுறைகண்ட வாசகத்தைப் புரிந்து கொள்ள வள்ளலாரின் ஆன்மீக நெறியோடு அவரது பிற செயல்பாடுகளைக் கணக்கில் கொள்ள வேண்டிய

தேவையுள்ளது"[4] என கை. சங்கர் குறிப்பிட்டுள்ளார். எவ்வுயிர்களிடத்தும் கொலைப் பாதகத்தைச் சமமாக எண்ண வேண்டும் என்கிறார் அடிகளார்.

வள்ளலாரின் ஜீவகாருண்ய ஒழுக்கம் 1860

அற்றார் அழிபசி தீர்த்தலையும் புலால் மறுத்தலையும் வற்புறுத்தி 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் நூலை வள்ளலார் எழுதினார். முன்னரே இவர் இந்நூலை தருமசாலை தொடங்குவதற்கு முன்னரே இந்நூலை எழுதத் தொடங்கினார். அட்சய ஆண்டு சித்திரைத்திங்கள் எட்டாம்நாள் (19.04.1866) அடிகளார் குறித்துள்ளார். ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் தலைப்பு 'சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்' எனக் காணப்படுகிறது.

"ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற்பதிப்பு அடிகளார் சித்தி பெற்ற ஐந்தாண்டுகளுக்குப்பின் 1879-இல் புதுச்சேரியில் டி.பெ. கிருஷ்ணசாமி நாயக்கரால் அச்சிடப்பெற்றது"[5] என ஊரன் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

"ஜீவகாருண்யம் என்ற வட சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் உயிரிரக்கம் என்பதாகும். ஓர் உயிர் மற்ற உயிர்களையும் ஒன்றாக உணர்கின்ற உணர்ச்சியைத்தான் ஜீவகாருண்யம் அல்லது ஆன்ம நேயம் என்கிறார் அடிகளார்"[6] என வி. அசோக்குமார் குறிப்பிட்டுள்ளார்.

பசியின் அவத்தை

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில், ஜீவஅறிவு விளக்கமில்லாமல் மங்குகின்றது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய, கடவுள் விளக்கம் பறைபடுகின்றது. தடுமாறிச் சிதறுகின்றது. புத்தி கெடுகின்றது. கண்பஞ்சடைந்து குழிந்து போகின்றது. காது செவிடுபடுகின்றது. நா உலர்ந்து வளுகின்றது. பற்கள் தளறுகின்றன. கை, கால் மலசல வழி வெதும்புகின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன. இருதயம் வேகின்றது. வயிறு பகீரென்றெரிகின்றது. தாபசோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. "உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபத்திய அடையாளங்களும், அவத்தைகளும் அனுபவங்களும் தோன்றுகின்றன." என்கிறார் வள்ளல் அடிகளார்.

வள்ளலாரின் திருஅருட்பா ஒரு பேரிலக்கியம், அருளிலக்கியம். இயல், இசை, நாடகம் ஆகிய முக்கூறுங்கொண்ட முழு இலக்கியம். திருஅருட்பா பாடல்கள் ஆறாயிரத்தில் ஓராயிரம் பாடல்கள் இசைப்பாடல்கள். ஆடற்பாடல்களும் நாடகப் (நாட்டிய) பாடல்களும் உண்டு. கடவுளிடம் வேண்டவும் தமது கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறவும் வள்ளலார் பல்வேறு சிறந்த உத்திகளைக் கையாள்கிறார்.

தருமசாலை, ஞானசபை முதலிய நிறுவனங்களை அமைத்து அருஞ்சோதி அனுபவத்தை விளக்கும் வகையில் பதிகங்களை அருளினார். சித்தி வளாகத்திலும் இருந்து இயற்றிய பதிகங்கள் ஆறாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. ஏனைய பதிகங்கள் அனைத்தும் முதல் ஐந்து திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. வள்ளலாரின் பாடல்களுக்குத் திருஅருட்பா எனப் பெயரிட்டு தொகுத்துத் திருமுறைப் பகுப்புகளாக்கிப் பதிப்பித்தவர் வள்ளலாரின் மாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் ஆவார்.

முதல் நூல்

அடிகளார் பிள்ளைப் பருவத்தில் சென்னை நகரில் எழுகிணறு என்னும் பெயருள்ள பேட்டையில் வாழ்ந்த போது நாள்தோறும் கந்தக்கோட்டத்திற்கு நடந்து சென்று சொந்தமாகக் கவிதை புனைந்து கந்தப் பெருமானை வழிபட்டார். அப்படி அவர் புனைந்த கவிதைகளைக் கந்தப் பெருமான் கோயிலைச்சார்ந்த ஒருவர் குறித்து வைத்துக் கொண்டு, பின்னர் அதனை ஒரு நூலாக வெளியிட்டார். அதுவே அடிகளாரின் முதல் நூலாகும்.

முதல்நான்கு திருமுறைகள்

இந்தச் சிறுநூல் வெளியான சில ஆண்டுகள் கழித்து வள்ளலார் பாடிய அனைத்தையும் தொகுத்துப் பெருநூல் வெளியிடுகின்ற பொறுப்பை அவர் அன்பர் சிலர் மேற்கொண்டனர். அவர்களுள், தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் ஆகிய இருவரும் இங்குக் குறிப்பிடத்தக்கவராவர்.

ஐந்தாம் திருமுறை

அடிகளார் இயற்றிய அவர் காலத்திலும் அதன் பிறகும் வெளியாகியுள்ள அருட்பாத்தொகுப்பு ஆறு திருமுறைகளுள் முதல் நான்கு திருமுறைகள் 1867ஆம் ஆண்டில் வெளியான பின்னர் அடுத்ததாக உள்ள ஐந்தாம் திருமுறை 1880ஆம் ஆண்டிலும் இறுதியாக உள்ள ஆறாம் திருமுறை 1885ஆம் ஆண்டிலும் வெளியிடப்பெற்றன.

ஆறாம் திருமுறை

அடிகளார் தடை போட்டதன் விளைவாக அவர் காலத்தில் முதல் நான்கு திருமறைகளை வெளிட்டதோடு அருட்பா அச்சிடும் பணியை நிறுத்தி வைத்திருந்தார் தொழுவூர் வேலாயுத முதலியார். 1874இல் அடிகளார் மறைந்த பின்னர் 1885 ஆம் ஆண்டில் சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம் அன்பர்களால் திருவருட்பா ஆறாந்திருமுறை வெளியாகியது.

புரட்சிப் பாடல்கள்

முதலைந்து திருமுறைகளில் பக்திப் பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பாக திருவொற்றியூர், திருந்தணிகை, கந்தக்கோட்டம் ஆகிய தலங்களில் உள்ள தெய்வங்களின்

மீது பாடியுள்ள பாடல்களையே முதல் ஐந்து திருமுறைகளிலும் காண்கின்றோம். ஆறாவது திருமுறை பூர்வஞான சிதம்பரம், உத்தாஞான சிதம்பரம், சித்தி வளாகம் ஆகிய தலங்களில் அடிகள் தங்கியிருந்தபோது பாடியவையாகும். கருங்குழியிலிருந்த காலத்திலும் எழுதப்பட்டிருக்கலாம். முன் தோன்றிய ஞானியர் எவரிடமும் காணாத புரட்சிகரமான சமயச் சீர்திருத்தக் கருத்துகளை ஆறாம் திருமுறையில் மட்டுமே காண முடிகின்றது. ஐந்து திருமுறைகளிலுள்ள பாடல்களைத் தனியாகப் பாடியிருப்பார் என்று எண்ணுவதற்கில்லை.

வள்ளலார் பதிப்பித்த நூல்கள்

அடிகளார் பதிப்பித்த நூல்கள்

1. **ஒழிவிலொடுக்கம்,**
2. **தொண்ட மண்டல சதகம்**
3. **சின்மயதீபிகை**

இவை முறையே 1855, 1857ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பெற்றன.

ஒழிவிலொடுக்கம் புதிப்பித்தல் 1831

ஒழிவிலொடுக்கம் ஓர் அருமையான ஞானநூல். அதனை அருளிய ஆசிரியர் கண்ணுடைய வள்ளலார். அதற்கு உரை செய்தவர் திருப்போர் சிதப்பர சுவாமிகள், அதனை அவ்வுரையுடனும் தாமெழுதிய சிறப்புப்பாயிர விருத்தியுடனும் முதன் முதலில் அச்சிற்பதிப்பித்தவர் வள்ளலார். “ஒழிவிலொடுக்கம் ஐக்கியவாத சைவ நூல் என்பாரும் சித்தாந்த சைவ நூலோ என்பாருமாக அறிஞர்கள் இருதிறத்தர். பொதுவாக வேதாந்த சித்தாந்த சமரச நூல் என்று நாம் கொள்ளலாம். ஒழிவிலொடுக்கம் என்னும் நூற்பெயரே பொருள் பொதிந்த அருமையான பெயர். அதன் அதிகாரப் பெயர்களே புதுமையானவை.

தொண்ட மண்டல சதகம் பதிப்பித்தல் 1855

இது தொண்ட மண்டலத்தின் சிறப்பைக் கூறும் நூல். செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களும் தென்னாற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பு தான்

பண்டைக் காலத்தில் தொண்டமண்டலம் என வழங்கப்பட்டது. சதகம் என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்களில் ஒன்று. நூறு பாடல்களின் தொகுப்பு என்பதால் சதகம் எனப் பெயர் பெற்றது. தொண்ட மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டிய மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகியன மண்டல சதகங்களாம். மண்டல சதகங்களுள் சிறந்ததும் பெருவழக்கானதும் தொண்ட மண்டல சதகமே. இதனை இயற்றியவர் படிக்காசுப் புலவர். அடிகளார் தொண்ட மண்டல சதகத்தை 1855ஆம் ஆண்டில் பதிப்பித்தார். இதனை ஆராய்ந்து பதிப்பிக்குமாறு வேண்டியவர் தொண்ட மண்டலம் துளுவவேளாளர் இயற்றமிழ் போதனாசாலைத் தலைவர் கொண்ணூர் ஐயாசாமி முதலியார்.

சின்மயதீபிகை பதிப்பித்தல் 1837

"சின்மயதீபிகை என்பது ஓர் அருமையான ஞானநூல் இதனை வள்ளலார் 1857 பிங்கள ஆண்டு கார்த்திகைத் திங்களில் முதன் முதலாகப் பதிப்பித்தார். இந்நூலாசிரியரின் பெயர் பெருமானது பதிப்பில் குறிப்பிடப்படவில்லை. சின்மயதீபிகை நூற்றுப் பதினான்கு பாடல்களையும் ஐந்து பாயிரச் செய்யுள்களையும் கொண்ட சிறந்த ஞான நூலாகும்." என ஊரன் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

வள்ளலாரின் குடும்பச்சூழல் அவரைப் பக்தியாளராகவும் கவிஞராகவும் மாற்றியது. அன்று நிலவிய சமுதாயச்சூழல் கவிஞராக இருந்த வள்ளலாரைச் சிந்தனையாளராக மாற்றியது. வள்ளலாரின் சொந்த மனநிலையின் உறுதிப்பாட்டால் சீர்திருத்தவாதியாய் உயர்ந்தார். அவரது சிந்தனை வடிவங்களாக அருட்பாக்களும், செயல்வடிவங்களாக நிறுவனங்களும் அமைந்தன. 1865இல் இருந்து 1874வரை கருக்குழியிலும் வடலூரிலும் மேட்டுக்குப்பத்திலும் வாழ்ந்த காலத்திலேயே அவரது பணிகள் உச்சநிலையை அடைந்தன. ஏறத்தாழ எட்டு ஆண்டுகளே அவர் தமது முழுமையான பணிக்கு எடுத்துக்கொண்டார். இக்குறுகிய காலத்தில் அவர் நிகழ்த்திய சாதனைகள் எண்ணி வியக்கத்தக்கனவாய் இருக்கின்றன. பன்னெறிச்சமயங்களும் மதபேதங்களும் பரவியிருந்த மக்களின் போக்கைத்தடுத்து சன்மார்க்க நெறிக்குத்திசைமாற்றிவிட்டு, இறையுணர்வும், ஜீகாருண்யமும், தொண்டும், தூய்மையும் நிறைந்த சன்மார்க்க மக்களாக மாற்றியுள்ளார். மனுமுறைக்கண்ட வாசகத்தில் மனிதர் செய்யும் பாவங்களைப் பட்டியலிடுகிறார் 'நல்லோர் மனதைநடுங்கச் செய்தேனோ' எனத் தொடங்கி சுமார் 44 தீச்செயல்களை கூறி மக்கள் அவற்றைச் செய்யாமல் வாழவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். மக்களிடையே காணப்பட்ட பசி என்னும் கொடுமையை நீக்கவேண்டுமென்று நிறுவிய சத்திய தருமச்சாலையின் அடுப்பு இன்றும் அணையாது ஏழைகளுக்கு அன்னதானம் செய்து

வருவது சிறப்புக்குரியது. இவை வள்ளலாரின் கருணைப் புரட்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

துணைநூற்பட்டியல்

1. சரவணன். ப., மனுமுறை கண்ட வாசகம், சந்தியா பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 2005.
2. மாணிக்கவாசகன் .ஞா., சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை இரண்டாம் பதிப்பு 1998.
3. துறை தண்டபாணி, மணிமேகலை உமா பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 1997.
4. இராமலிங்க அடிகள். மனுமுறை கண்ட வாசகம், வ. உ. சி. நூலகம் மற்றும் ஜீவகாருண்ய ஒழுக்கம், சென்னை முதற்பதிப்பு 2004.
5. ஊரன் அடிகள். இராமலிங்க அடிகள் வரலாறு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர். இரண்டாம் பதிப்பு 1976.
6. கை. சங்கர். மற்றும், வி. அசோக்குமார்., வள்ளலார் படைப்புகள் பன்முக பார்வை தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுதி - 1. தமிழியல் துறை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 2010.

REFERENCE

1. Saravanan. p., Manup Kanda Text, Sandhya Publishing House, Chennai First Edition 2005.
2. Manikkavasakan .Jn., Silapathikaram Gallurai, Uma Publishing House, Chennai Second Edition 1998.
3. Departmental Police, Manimegalai Uma Publishing House, Chennai First Edition 1997.
4. Ramalinga feet. Mankind's text, W. U. C. Library and philanthropic discipline, Chennai First Edition 2004.
5. City steps. History of Ramalinga Feet, Samarasa Sanmarkha Research Institute, Vadalore. Second Edition 1976.
6. Hand. Shankar. and V. Ashokumar. Vallalar Works Multidimensional Perspective National Seminar Papers Vol-Department of Tamil Studies Annamalai University - 2010.